## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## நான்காம் பத்து

### எட்டாம் திருமொழி - கவளயானை
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 11. திருப்பார்த்தன்பள்ளி
### திருமாலினிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு தாய் இரங்கிக் கூறிய பாசுரம்

** கவள யானைக் கொம்பு ஒசித்த * கண்ணன் என்றும் காமரு சீர் *
குவளை மேகம் அன்ன மேனி * கொண்ட கோன் என் ஆனை என்றும் **
தவள மாட நீடு நாங்கைத் * தாமரையாள் கேள்வன் என்றும் *
பவள வாயாள் என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 1

கஞ்சன் விட்ட வெஞ்சினத்த * களிறு அடர்த்த காளை என்றும் *
வஞ்சமேவி வந்த பேயின் * உயிரை உண்ட மாயன் என்றும் **
செஞ்சொலாளர் நீடு நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பஞ்சி அன்ன மெல்லடியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 2

அண்டர் கோன் என் ஆனை என்றும் * ஆயர் மாதர் கொங்கை புல்கு
செண்டன் என்றும் * நான்மறைகள் * தேடி ஓடும் செல்வன் என்றும் **
வண்டுலவு பொழில் கொள் நாங்கை * மன்னு மாயன் என்றென்று ஓதி *
பண்டு போல் அன்று என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 3

கொல்லை ஆனாள் பரிசழிந்தாள் * கோல் வளையார் தம் முகப்பே *
மல்லை முந்நீர் தட்டிலங்கை * கட்டழித்த மாயன் என்றும் **
செல்வம் மல்கு மறையோர் நாங்கை * தேவ தேவன் என்றென்று ஓதி *
பல்வளையாள் என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 4

அரக்கர் ஆவி மாள அன்று * ஆழ்கடல் சூழ் இலங்கை செற்ற *
குரக்கரசன் என்றும் * கோலவில்லி என்றும் ** மாமதியை
நெருக்கு மாட நீடு நாங்கை * நின்மலன் என்றென்று ஓதி *
பரக்கழிந்தாள் என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 5

ஞாலம் முற்றும் உன்டு உமிழ்ந்த * நாதன் என்றும் நானிலம் சூழ் *
வேலை அன்ன கோல மேனி * வண்ணன் என்றும் மேல் எழுந்து **
சேல் உகளும் வயல் கொள் நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பாலின் நல்ல மென்மொழியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 6

நாடி என்தன் உள்ளம் கொண்ட * நாதன் என்றும் * நான்மறைகள்
தேடி என்றும் காண மாட்டாச் * செல்வன் என்றும் ** சிறை கொள் வண்டு
சேடுலவு பொழில் கொள் நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பாடகம் சேர் மெல்லடியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 7

உலகம் ஏத்தும் ஒருவன் என்றும் * ஒண்சுடரோடு உம்பர் எய்தா *
நிலவும் ஆழிப் படையன் என்றும் * நேசன் என்றும் ** தென்திசைக்குத்
திலதம் அன்ன மறையோர் நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பலரும் ஏச என் மடந்தை * பார்த்தன்பள்ளி பாடுவாளே 8

கண்ணன் என்றும் வானவர்கள் * காதலித்து மலர்கள் தூவும் *
எண்ணன் என்றும் இன்பன் என்றும் * ஏழுலகுக்கு ஆதி என்றும் **
திண்ண மாட நீடு நாங்கைத் * தேவ தேவன் என்றென்று ஓதி *
பண்ணின் அன்ன மென்மொழியாள் * பார்த்தன்பள்ளி பாடுவாளே 9

** பாருள் நல்ல மறையோர் நாங்கைப் * பார்த்தன்பள்ளிச் செங்கண் மாலை *
வார்கொள் நல்ல முலை மடவாள் பாடலைத் * தாய் மொழிந்த மாற்றம் **
கூர்கொள் நல்ல வேல் கலியன் * கூறு தமிழ் பத்தும் வல்லார் *
ஏர்கொள் நல்ல வைகுந்தத்துள் * இன்பம் நாளும் எய்துவாரே 10

**அடிவரவு:** கவளம் கஞ்சன் அண்டர் கொல்லை அரக்கர் ஞாலம் நாடி உலகம் கண்ணன் பாருள் நும்மை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---